மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: தேசிய அபிவிருத்திக் கவுன்சில் கூட்டத்திற்குச் செல்கிறவர்கள் முதல் அமைச்சர் அவர்கள். அவரைத்தான் கேட்கவேண்டும். அப்படி ஒன்றும் இந்த அரசுக்குத் தகவல் இல்லை. அரசாங்கமே ஏற்று நடத்தவேண்டுமென்ற கொள்கை முழு அளவிற்கு இப்போது ஏற்றுக்கொள்ளவில்லை.

Quarters for staff of Industrial Training Centres.

* 583 Q.—THIRU K. T. K. THANGAMANI: Will the Hon. the Minister for Industries be pleased to state whether it is a fact that there are no adequate quarters for the staff in Industrial Training Centres?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: இல்லை. தமிழ் நாட்டில் உள்ள 31 தொழிற்பயிற்சி நிலையங்களில் 22 நிலையங்களில் பணியாற்றுவோருக்கு குடியிருப்புகள் கட்டித் தரப்பட்டுள்ளன. கிண்டி மற்றும் வட சென்னையில் உள்ள நிலையங்கட்கும், சென்னை மகளிர் தொழிற்பயிற்சி நிறுவனத்திற்கும் சென்னை நகர் எல்லைக்குள் உள்ள படியால் தனியே குடியிருப்புகள் கட்ட வேண்டுவதில்லை என்று தீர்மானிக்கப்பட்டது. மீதமுள்ள 6 நிலையங்கட்கு ஊழியர் குடியிருப்புகள் கட்டும் யோசனை நிதி நிலைமை இடங்கொடுக்கும் பொழுது எடுத்துக்கொள்ளப்படும்.

வேலை வாய்ப்பின்மை குறித்த வல்லுநர் குழு

*584 வினா—திரு. என். கிட்டப்பா: மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தமிழ் நாட்டில் உள்ள வேலைவாய்ப்பு நிலைமைகளை ஆராய்ந்து ஆவன செய்ய நிபுணர் குழு ஒன்று அமைக்கும் செயற்குறிப்பு ஏதேனும் அரசின் பரிசீலனையிலுள்ளதா?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: வேலைவாய்ப்பின்மை குறித்த ஆய்வு செய்ய வல்லுநர் குழு ஒன்றைத் தொழிலாளர் நலத் துறையின் 17—9—71 நாளிட்ட 1175-ஆம் எண் ஆணையில் அரசு அமைத்துள்ளது. மேற்படி ஆணையின் நகல் @ ஒன்று பேரவை முன் வைக்கப்பட்டுள்ளது.

@ 154–157-ம் பக்கங்களில் இரண்டாம் இணைப்பாக அச்சிடப் பட்டுள்ளது.

1972 மார்ச் 20]

திரு. என். கிட்டப்பா : தலைவர் அவர்களே, தமிழ்நாட்டிலுள்ள வேலைவாய்ப்பின்மைக்கு முக்கிய காரணம் மத்திய அரசு மேற்கொள்ளும் கொள்கைகள் என்று நம்பப்படுவதால், இந்தக் குழு அதற்கேற்றவாறு பரிந்துரை செய்ய முன்வராவிடில் நம் அரசு அது பற்றி மேற்கொள்ளவிருக்கும் கொள்கையினை அறிவிக்க இயலுமா?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : ஏராளமான தொழிற்சாலைகள் நாட்டில் பெருக்கப்படவேண்டுமென்று பொருளாதார அடிப்படையில் மத்திய அரசு கொள்கைகளை வகுக்கவேண்டுமென்று நாம் வற்புறுத்தி வருகிறோம். இந்த வேலையில்லாத் திண்டாட்டத்தைப் பரிசீலிப்பதற்கு அகில இந்திய அடிப்படையில் மத்திய அரசு ஒரு குழு அமைத்துள்ளது. அந்தக் குழுவிற்கு ஆலோசனை கூறி ஒத்துழைப்பு தருவதற்கு நம் மாநில சார்பில் நான் முன்னர் குறிப்பிட்டபடி ஒரு குழு அமைக்கப்பட்டுள்ளது.

THIRU K. M SUBRAMANIAM : Sir, in this Committee are there only officials or are there public men who are deeply involved in this sort of unemployment problem?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : அகில இந்தியக் குழுவில் நாடாளுமன்ற உறுப்பினர்களும் சேர்க்கப்பட்டிருக்கிறார்கள். அலுவலர்களும் இருக்கிறார்கள். ஒரு சட்டமன்ற உறுப்பினர் தலைவராக இருக்கிறார். நம்முடைய மாநிலத்தைப் பொறுத்த அளவில் அரசுக்கு உதவி செய்வதற்காக நியமிக்கப்பட்டிருக்கும் காரணத்தால், அலுவலர்கள் மட்டுமே இந்தக் குழுவில் நியமிக்கப்பட்டிருக்கிறார்கள்.

ஊராட்சிகளிலுள்ள சாலைகள்

*585 வின—திரு. கே. என். குமாரசாமி : மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

பஞ்சாயத்தினால் பராமரிக்க முடியாத ரோடுகளை (பஸ் போக்குவரத்து மார்க்கம்) அரசாங்கம் ஹைவேஸ் மூலம் பராமரிக்கும் செயற்குறிப்பு ஏதேனும் உள்ளதா ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : ஆம்.

திரு. சு. துரைசாமி : அமைச்சர் அவர்கள் "ஆம்" என்று சொன்னார்கள். எவ்வளவு ஆண்டுக் காலத்தில் அந்தப் பாதைகளை எல்லாம் அரசாங்கப் பாதைகளாக மாற்றும் செயற்குறிப்பு இருக்கிறது?